செ.வெ.எண்: 396/2016 நாள்: 24.06.2016

# அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்கமங்கலம் முதல் நீரோடி வரையிலான மீனவ கிராமங்களிலுள்ள மீன்பிடி விசைப்படகுகளில் அரசு நிர்ணயித்தவாறு வண்ணம் பூசிட ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை வண்ணம் பூசிடாத விசைப்படகுகள் 30.06.2016-க்குள் வண்ணம் பூசிட வேண்டுமென தெரிவிக்கலாகிறது. அரசு நிர்ணயித்த வண்ணம் பூசிய விசைப்படகுகளுக்கு மட்டுமே உரிமம் புதுப்பித்தல் மற்றும் மானிய எரியெண்ணெய் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் கன்னியாகுமரி மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் எல்லைக்குட்பட்ட டீகோ கார்சியா மற்றும் செய்செலிஸ் தீவு பகுதியில் அத்துமீறி மீன்பிடிப்பதை உடனடியாக நிறுத்திடவும் தவறும் விசைப்படகுகள் மீது தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் படகின் பதிவு மற்றும் உரிமத்தை ரத்து செய்து தொழில் முடக்கம் செய்தல் அபராதம் விதித்தல் போன்ற கடும் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்படும். கடலில் இடையூறு எச்சரிக்கை ஒலி பரப்பும் சாதனம் அரசின் 90 சதவீத மானியத்திலும் அதிக அதிர்வெண் கொண்ட கம்பியில்லா தொலைதொடர்பு சாதனம் அரசின் 25மூ மானியத்திலும் மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது. மீனவர்கள் கடலாமைகளை பாதுகாத்தல் மற்றும் மேற்கு கடற்கரை மீன்பிடி தடைக்காலத்தில் விசைப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபடக் கூடாது என்றும் தெரிவிக்கலாகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இருப்பு) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.